சிவமயம்



அமரர் வயிரமுத்து சின்னத்தம்பி அவர்களினதும்

அமரர் குலேந்திரன் ஜமுனா அவர்களினதும்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

23.10.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அமரர்

# திரு வயிரமுத்து சின்னத்தம்பி

அவர்கள்



மலர்வு — உதிர்வு

**02.04.1934** — **08.09.2004**

### திதிவெண்பா

ஆண்டுதாரண வருடமான ஆவணித்திங்கள் தனில்
பூண்ட அபரபட்க்ஷ தசமிதிதி தனில்
நீண்ட சின்னத் தம்பி நாமமதனை நாம் சிந்தனையில்
தீண்ட உறுதி செய்திட்ட நாளதுவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

அமரர்

# திருமதி குலேந்திரன் ஜமுனா

அவர்கள்



**மலர்வு** **20.02.1960**

**உதிர்வு** **20.09.2004**

## திதிவெண்பா

பொங்குதாரண வாண்டு பூத்தபுகழ் புரட்டாதியில்
பூர்பபட்கூடி ஸப்தமியில் - பார்புகழ்
குலேந்திரன் மனையாய் ஜமுனாவள்
ஏமமாய்ச் சங்கரன்சேர் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# கௌரிக் காப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறுபோட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல் லோபதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடன் தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி வாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் பெருகிவரும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# வயிரமுத்து சின்னத்தம்பி

அவர்களின்

## வாழ்க்கை வரலாறு

ஈழவள நாட்டின் தலையாக விளங்கும் வடபாலிலே யாழ் குடாநாட்டிலே வலிகாமம் கிழக்கில் அச்செழு நீர்வேலியில் விவசாய வேளான் குளத்தில் பிறந்தவர் வைரமுத்து அவர்கள். இவரது புத்திரனே சின்னத்தம்பி ஆவார்.

அச்செழுவில் விவசாயத்தை ஜீவனோபாயமாக கொண்டு வாழ்ந்த வைரமுத்து யாழ் குடாநாட்டின் வலிகாமம் கிழக்கில் புதுவையூரின் கிழக்கின் விலுப்பிட்டியில் வசித்த சிவகாமியை திருமணம் செய்து நல்வாழ்வு வாழ்ந்து வந்தார். இவர் புதுவையூரின் மக்களை கவர்ந்து மக்களுக்கும் ஊருக்கும் பலசேவைகளை புரிந்து நல்லமதிப்பை பெற்றவர். இவ்வள்ளலாருக்கு புதுவையூரின் விலுப்பிட்டியில் 02.04.1934 அவதரித்தவரே சின்னத்தம்பி ஆவார்.

விலுப்பிட்டியில் அவதரித்த சின்னத்தம்பி, மாணிக்கம், செல்லப்பா ஆகிய சகோதரங்களுடன் அன்பும் பண்புமாக வளர்ந்து வந்தார்.

இவர் தனது கல்வியை யா/ஸ்ரீசோமாஸ்கந்தக்கல்லூரியில் கற்று தனது அறிவை வளர்த்து எல்லோரும் பண்பாக பேசும் அளவுக்கு நற்குணங்களைக் கொண்டு வளர்ந்து வந்தார். பின் புதுவையூரின் செழிப்புக்கு விவசாயம் ஓர் முக்கிய காரணியாக விளங்கிய வேளையில் தன்னையும் ஓர் விவசாயியாக மாற்றி பல பயிர்களை நாட்டி வருமானத்தை பெற்று வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் புதுவையூரின் கிழக்கில் வாழ்ந்த வீரகத்தி கற்பகம் தம்பதிகளின் புதல்வியாம் சின்னம்மாவை திருமணத்தின் மூலம் இணைத்துக் கொண்டார். இவர்களது இனிய இல்லறத்தின் பயனாக ஓர் ஆண் குழந்தையை பெற்றெடுத்தனர்.

இம்மழலைச் செல்வத்தை ஏற்றமுறையில் அன்பும் ஆதரவும் கொடுத்து கல்வியறிவிலும் ஆற்றலிலும் மிக்கவராக வளர்த்தெடுத்தார். உரிய முறைப்படி பிள்ளையை தான் விரும்பியது போல அரச உத்தியோகத்திலும் இணைத்துக்கொண்டார். அதே போல் உரிய காலத்தில் நல்வாழ்க்கையையும் ஏற்படுத்தி தனது காலத்தில் பேரப்பிள்ளையையும் பெற்று அவர்களின் மழலைக் குரல்களையும் இனிதே கேட்டு குழாவி மகிழ்ந்தார். இவ்வாறு "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவர் தெய்வத்துள் வைக்கப்படும்" எனும் வாக்குக்கு இணங்க விளங்கிய சின்னத்தம்பி 08.09.2004 அன்று இறையடி சேர்ந்தார். அவரது ஆத்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

## மனைவியின் ஆற்றாமை

கண்கண்ட கோவிலெல்லாம் கையெடுத்தேன் என் தாலிக்காக
கண்ணாளா இங்கென்னை தவிக்கவிட்டு சென்றாயோ
செல்வச் சிறப்புடனே செருக்கேதும் இல்லாமல்
செம்மல் நீர் எமை கண்டு வந்தீரே
வீடுதேடி வருவோரை வீதியிலே தான் சென்று
இன்முகம் காட்டி அழைத்தே வருவீரே
கண்ணாக நாம் வளர்த்த கனிகள் முகம் தெரியலையோ
கண்ணெல்லாம் பூத்ததுவே தேடினேன் நீர் வாரிரோ
இன்னும் பொறுக்கலையே என் நெஞ்சு கொதிக்கிறதே
விண்ணுலகம் காணவே எமைதவிக்க விட்டுச் சென்றீரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகன் புலம்பல்

பிள்ளை என்பதில் ஆண்பிள்ளையான என்னை பெற்றெடுத்து தக்கபடி பேணிபாதுகாத்து வளர்ந்தெடுத்த கோயில் என் அப்பா இனவெறியும் மதவெறியும் கூர்மைகொண்டு எங்கெங்கும் இரத்த வெள்ளம் பாய்ந்தவேளை குருவியாக இருந்த என்னை வளர்ந்தெடுக்க வியர்வை சிந்தி உழைத்த உயிரான தந்தையாரே உமை நினைத்து உருகியழ ஒருயுகமே போதாதையா,

இலையுதிர்ந்த செடியாக
நீருவர்ந்த நிலமாக
நிலையிழந்த கொடியாக
அலைவிழுந்த சருகாக
உயிருருகி ஏங்கும் என்னை
நிலையறிய மாட்டீரோ.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

தத்தி தவழ்ந்து வரக்கண்ட போதிற் துணைபுரிந்து
முத்தம் கொடுத்த அன்புத் தாத்தா இறந்தீரோ
சித்தம் கலங்கி சிறியவர் நாம்படும் துன்பமினி
மெத்த வருந்திடு மேனியெங்கும் நடுங்கியதே
பக்கம் வந்து நின்றெமக்கு பாசம் தருவிரே
நித்தம் இனி உம் நினைவில் வாடிடுவோம். நாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் புகழ்பூத்த பூமியாய் விளங்கும் புங்கையூராம்
புங்குடுதீவின் புகழாய்ப் பூத்த சைவவேளாண்
குலத்திருமகளாம்

# திருமதி யமுனா குலேந்திரன்

அவர்களின்

# *வாழ்க்கை வரலாறு*

ஈழத்திருநாட்டின் தலையாய் சிறந்து காணப்படும் யாழ் குடாநாட்டினைச் சுற்றியிருக்கும் சப்ததீவுகளில் ஒன்றான பொன் கொழிக்கும் நகராம் பொன்கொடு தீவாக விளங்கும் புங்குடுதீவின் சைவவேளாண் குலத்தில் வல்லயம் பதிவாழ் இலுப்பநின்ற நாச்சிமார் பதியில் அமரர் திருமருதப்பு திருமதி பாக்கியம் தம்பதியிருக்கு ஆறுபுதல்வர்களாக சிவசுப்பிரமணியம் நித்தியகல்யாணி, குணபாலன், றஞ்சினி, லலிதா ஆகியோரின் சகோதரியாக அமரர் யமுனா உடன்பிறந்தார்.

குறைவற்ற விளைபொருட்களும் செல்வப் பெருக்கும் கூடிய புகழ்பூத்த தீவகம் ஆலயச் சிறப்புமிக்க சிவபுண்ணிய பூமியாம் இங்கு இவர் யாழ்/புங்குடுதீவு ஸ்ரீசண்முகநாதன் வித்தியாலயத்தில் கல்வி பயின்று உயர் கல்வியை யா/வேலனை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய கல்லூரியில் கல்வி பயின்றார். பின்னர் புங்குடுதீவு வைத்தியசாலையில் ஊழியராகக் கடமையற்றினார். இவ்வேளையில் இல்லற வாழ்வை வாழ்வதற்காக இருவரின் விருப்பப் படி புத்தூர் கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி குலேந்திரன் அவர்களை சைவ மரபின்படி திருமணம் செய்து கொண்டார். இவர்களின் இல்லறம் இனிது தளைத்தோங்கவே பிள்ளைச் செல்வங்களாக தலைமகனாக லபேந்தினைத் தொடர்ந்து லக்ஸ்மன், ஜனன், தாரணி, நர்த்தனன் ஆகியோரைப் பெற்றெடுத்து இல்லறம் நல்லறமாக இனிதே நடாத்தி வந்தனர். கணவனுக்கு பிரியமான மனைவியாகவும், புதல்வர்களுக்கு இனிய தாயாகவும், கோப்பாய் வைத்தியசாலையில் நோயளர்களுக்கு சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையாளராகவும் தனது பணிகளை சிறப்படனே செய்து வந்தார். இவ்வேளையிற்தான் காலன் அவன்தன் காலத்தின் பிடியினால் கைப்பற்றிவிட்டான். இப்புண்ணிய ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

*"சிவ சிவ என்றிடச் சிவகதிதானே"*

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

## கணவனின் ஆற்றாமை

இல்லறத்திற்கு சிறந்த மணவாழ்வு உத்தமி என
உன்னைத் தெரிந்து இல்லற வாழ்வில் கைப்பிடித்து
இல்லறம் எனும் நல்லறத்தில் இனிதாக வாழ்க்கையிலே
அன்பான என்னையும் விட்டு ஏன் சென்றீர்
காலமெல்லாம் எண்ணாய் காத்து வந்து உமக்கு
நான் என்ன கைமாறு செய்யவும் நீர் இங்கில்லையே
உன் பூவோடு பொட்டெல்லாம் புயலோடு போனதம்மா
யார் போட்ட சாபமோ யான் அறியேன்
என் வாழ்க்கைத் துணைவி போன இடம் தெரியவில்லை
உன்னை இழந்து மக்களை சுமந்து
மட்டில்லா துயர் கொண்டலைகின்றேன்

## பிள்ளைகளின் ஆற்றாமை

அம்மாவே நீ எப்போ வருவாய் என்று
தப்பாமல் பார்த்திருந்தோம் கண்கள் இருக்குதம்மா
இப்போ நீ இங்கு வரமாட்டாய் என்ற
தப்பான சேதியை கேட்டோமே நாமிங்கு
அம்மா என்றழைத்திட இனியார் எமக்குண்டு
அப்படிநாம் என்ன தப்புதான் செய்தோம்
இம்மாநிலத்தில் யாம் இன்பமுடன் வாழ்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியவுரை பல்பகன்று எமை காத்த அம்மாவே
துப்பேதும் அறியாயோ எம்மைத்தான் நினைத்திடவே
தெப்பமாய் விண்ணில் எமக்கு வழிகாட்டிடம்மா

## சகோதரரின் ஆற்றாமை

குருதியுடன் பிறப்பாய் குலத்துதித்த குணவதியே
இதயத்தால் ஏகமாய் வாழ்ந்திருந்தோம்
எம்மருமைச் சோதரியே!
என்னால் எம்குலப் பெருமை ஓங்கி
வளர்ந்ததம்மா
மின்னாமல் முழங்குதல் போல் விண்ணகம்
நீ சென்றதென்ன?
நம்பிய நாம் தவித்திருக்க நாகியே
ஏன் பிரிந்தாய்
கண் அதனில் உமை நினைத்து
பாய்கின்ற ஆறிங்கே
கைகள் தலைதனிலடித்து கதறுகின்றோம்

## தாயார் ஆற்றாமை

ஐயிரண்டு மாதங்கள் அங்கம் நொந்து பெற்றெடுத்தேன்
வையத்தில் வாழ்வாங்கு வாழ வழி வகுத்தும்
செம்மையாய் நீ வாழ சீர் செய்ய நானிருந்தும்
செம்மல் நீ எமைவிட்டு எங்கு தான் சென்றாயோ
அம்மாவை நீ பார்ப்பாய் என்று நான் இருக்க
அம்மாவை நீ விட்டு அரனடிக்கே சென்றாயோ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறைகள்

| எண் | திருமுறையின் பெயர் | திருமுறை ஆசிரியர் | ஆசிரியர் தொகை |
|---|---|---|---|
| 1 அ | தேவாரம் | திருஞானசம்பந்தமூர்த்தி | 1 |
| 2 ட | தேவாரம் | நாயனார் | |
| 3 ங் | தேவாரம் | | |
| 4 க | தேவாரம் | திருநாவுக்கரசு நாயனார் | 1 |
| 5 ண் | தேவாரம் | | |
| 6 மு | தேவாரம் | | |
| 7 றை | தேவாரம் | சுந்தரமூர்த்தி நாயனார் | 1 |
| 8 | திருவாசகம் | மாணிக்கவாசக சுவாமிகள் | 1 |
| | திருக்கோவையார் | | |
| 9 | திருவிசைப்பா | திருமாளிகைத்தேவர் | |
| | திருப்பல்லாண்டு | சேந்தனார் | |
| | | கருவூர்த்தேவர் | |
| | | நம்பிகாடநம்பி | |
| | | கண்டராதித்தர் | 9 |
| | | வேணாட்டடிகள் | |
| | | புருடோத்தமநம்பி | |
| | | தேிராயர் | |
| 10 | திருமந்திரம் | திருமூலர் | 2 |
| 11 | 40 பிரபந்தம் | திருவாலவாயுடையார் | |
| | | காரைக்காலம்மையார் | |
| | | ஐயடிகள் கர்வர்கோன் | |
| | | சேரமான் பெருமாள் | |
| | | நக்கீரதேவர் | 12 |
| | | கல்லாடதேவர் | |
| | | கபிலதேவர் | |
| | | பரணதேவர் | |
| | | இலம்பெருமானடிகள் | |
| | | அதிராவடிகள் | |
| | | பட்டினத்து அடிகள் | |
| | | நம்பியாண்டார் நம்பி | |
| 12 | பெரியபுராணம் | சேக்கிழார் | 1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

1. இலங்கையில் தபால் சேவை தொடங்கப்பட்ட ஆண்டு? **1841**
2. இலங்கையில் முதல் முதல் தோன்றிய செய்தித்தாள்? **கொழும்பு ஜேர்னல்**
3. இலங்கையில் முதல் புகையிரத சேவை தொடக்கப்பட்ட ஆண்டு? 1867
4. பௌத்த கொடியை முதன்முதலில் உருவாக்கியவர் யார்? **கேணல் ஒல் கொட்**
5. இந்தியாவில் சமீபத்தில் அணுகுண்டு வெடிப்பரிசோதனை நடாத்திய விஞ்ஞானியின் பெயர் என்ன? **அப்துல் கலாம்**
6. இலங்கையில் அதிகூடிய பரப்பளவை உடைய மாவட்டம் எது? **அனுராதபுரம்**
7. உலகில் பூகம்ப நாடு எது? **துருக்கி**
8. உலகில் ஆகக் குறைந்த சனத்தொகை கொண்ட நாடு? **வத்திக்கான்**
9. இலங்கையில் கிறிக்கற் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் யார்? **சந்திர ஜெயரட்ண**
10. கொழும்பு லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது? **1982**

11 இலங்கைத் தீவின் நீளம் அகலம் யாது?
நீளம் 432 km, அகலம் 224 km

12 வாகனங்கள் ஓடும் வேகத்தை அளவிட உதவும் கருவி எது? **கதிர்மானி**

13 நேரத்தை அளவிடும் சிறிய அலகு யாது? **செக்கன்**

14. கோணங்களை அளவிட உதவும் கருவி எது? **பாகைமானி**
15. திசைகளை அறிய உதவும் கருவி எது? **காந்தத்திசையறிவு கருவி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ලඝුගණක

மடக்கைகள்

# LOGARITHIMS

| | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | මධ්‍යක අන්තරය / இடை வித்தியாசங்கள் / Mean Difference | | | | | | | | |
| 10 | 0000 | 0043 | 0086 | 0128 | 0170 | 0212 | 0253 | 0294 | 0334 | 0374 | 4 | 8 | 12 | 17 | 21 | 25 | 29 | 33 | 37 |
| 11 | 0414 | 0453 | 0492 | 0531 | 0569 | 0607 | 0645 | 0662 | 0719 | 0755 | 4 | 8 | 11 | 15 | 19 | 23 | 26 | 30 | 34 |
| 12 | 0792 | 0828 | 0864 | 0899 | 0934 | 0969 | 1004 | 1038 | 1072 | 1106 | 3 | 7 | 10 | 14 | 17 | 21 | 24 | 28 | 31 |
| 13 | 1139 | 1173 | 1206 | 1239 | 1271 | 1303 | 1335 | 1367 | 1399 | 1430 | 3 | 6 | 10 | 13 | 16 | 19 | 23 | 26 | 29 |
| 14 | 1461 | 1492 | 1523 | 1553 | 1584 | 1614 | 1644 | 1673 | 1703 | 1732 | 3 | 6 | 9 | 12 | 15 | 18 | 21 | 24 | 27 |
| 15 | 1761 | 1790 | 1818 | 1847 | 1875 | 1903 | 1931 | 1959 | 1987 | 2014 | 3 | 6 | 8 | 11 | 14 | 17 | 20 | 22 | 25 |
| 16 | 2041 | 2068 | 2095 | 2122 | 2148 | 2175 | 2201 | 2227 | 2253 | 2279 | 3 | 5 | 8 | 11 | 13 | 16 | 18 | 21 | 24 |
| 17 | 2304 | 2330 | 2355 | 2380 | 2405 | 2430 | 2455 | 2480 | 2504 | 2529 | 2 | 5 | 7 | 10 | 12 | 15 | 17 | 20 | 22 |
| 18 | 2553 | 2577 | 2601 | 2625 | 2648 | 2672 | 2695 | 2718 | 2742 | 2765 | 2 | 5 | 7 | 9 | 12 | 14 | 16 | 19 | 21 |
| 19 | 2788 | 2810 | 2833 | 2856 | 2878 | 2900 | 2923 | 2945 | 2967 | 2989 | 2 | 4 | 7 | 9 | 11 | 13 | 16 | 18 | 20 |
| 20 | 3010 | 3032 | 3054 | 3075 | 3096 | 3118 | 3139 | 3160 | 3181 | 3201 | 2 | 4 | 6 | 8 | 11 | 13 | 15 | 17 | 19 |
| 21 | 3222 | 3243 | 3263 | 3284 | 3304 | 3324 | 3345 | 3365 | 3385 | 3404 | 2 | 4 | 6 | 8 | 10 | 12 | 14 | 16 | 18 |
| 22 | 3424 | 3444 | 3464 | 3483 | 3502 | 3522 | 3541 | 3560 | 3579 | 3598 | 2 | 4 | 6 | 8 | 10 | 12 | 14 | 15 | 17 |
| 23 | 3617 | 3636 | 3655 | 3674 | 3692 | 3711 | 3729 | 3747 | 3766 | 3784 | 2 | 4 | 6 | 7 | 9 | 11 | 13 | 15 | 17 |
| 24 | 3802 | 3820 | 3838 | 3856 | 3874 | 3892 | 3909 | 3927 | 3945 | 3962 | 2 | 4 | 5 | 7 | 9 | 11 | 12 | 14 | 16 |
| 25 | 3979 | 3997 | 4014 | 4031 | 4048 | 4065 | 4082 | 4099 | 4116 | 4133 | 2 | 3 | 5 | 7 | 9 | 10 | 12 | 14 | 15 |
| 26 | 4150 | 4166 | 4183 | 4200 | 4216 | 4232 | 4249 | 4265 | 4281 | 4298 | 2 | 3 | 5 | 7 | 8 | 10 | 11 | 13 | 15 |
| 27 | 4314 | 4330 | 4346 | 4362 | 4378 | 4393 | 4409 | 4425 | 4440 | 4456 | 2 | 3 | 5 | 6 | 8 | 9 | 11 | 13 | 14 |
| 28 | 4472 | 4487 | 4502 | 4518 | 4533 | 4548 | 4564 | 4579 | 4594 | 4609 | 2 | 3 | 5 | 6 | 8 | 9 | 11 | 12 | 14 |
| 29 | 4624 | 4639 | 4654 | 4669 | 4683 | 4698 | 4713 | 4728 | 4742 | 4757 | 1 | 3 | 4 | 6 | 7 | 9 | 10 | 12 | 13 |
| 30 | 4771 | 4786 | 4800 | 4814 | 4829 | 4843 | 4857 | 4871 | 4886 | 4900 | 1 | 3 | 4 | 6 | 7 | 9 | 10 | 11 | 13 |
| 31 | 4914 | 4928 | 4942 | 4955 | 4969 | 4983 | 4997 | 5011 | 5024 | 5038 | 1 | 3 | 4 | 6 | 7 | 8 | 10 | 11 | 12 |
| 32 | 5051 | 5065 | 5079 | 5092 | 5105 | 5119 | 5132 | 5145 | 5159 | 5172 | 1 | 3 | 4 | 5 | 7 | 8 | 9 | 11 | 12 |
| 33 | 5185 | 5198 | 5211 | 5224 | 5237 | 5250 | 5263 | 5276 | 5289 | 5302 | 1 | 3 | 4 | 5 | 6 | 8 | 9 | 10 | 12 |
| 34 | 5315 | 5328 | 5340 | 5353 | 5366 | 5378 | 5391 | 5403 | 5416 | 5428 | 1 | 3 | 4 | 5 | 6 | 8 | 9 | 10 | 11 |
| 35 | 5441 | 5453 | 5465 | 5478 | 5490 | 5502 | 5514 | 5527 | 5539 | 5551 | 1 | 2 | 4 | 5 | 6 | 7 | 9 | 10 | 11 |
| 36 | 5563 | 5575 | 5587 | 5599 | 5611 | 5623 | 5635 | 5647 | 5658 | 5670 | 1 | 2 | 4 | 5 | 6 | 7 | 8 | 10 | 11 |
| 37 | 5682 | 5694 | 5705 | 5717 | 5729 | 5740 | 5752 | 5763 | 5775 | 5786 | 1 | 2 | 3 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 38 | 5798 | 5809 | 5821 | 5832 | 5843 | 5855 | 5866 | 5877 | 5888 | 5899 | 1 | 2 | 3 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 39 | 5911 | 5922 | 5933 | 5944 | 5955 | 5966 | 5977 | 5988 | 5999 | 6010 | 1 | 2 | 3 | 4 | 5 | 7 | 8 | 9 | 10 |
| 40 | 6021 | 6031 | 6042 | 6053 | 6064 | 6075 | 6065 | 6096 | 6107 | 6117 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 8 | 9 | 10 |
| 41 | 6128 | 6138 | 6149 | 6160 | 6170 | 6180 | 6191 | 6201 | 6212 | 6222 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 42 | 6232 | 6243 | 6253 | 6263 | 6274 | 6284 | 6294 | 6304 | 6314 | 6325 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 43 | 6335 | 6345 | 6355 | 6365 | 6375 | 6385 | 6395 | 6405 | 6415 | 6425 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 44 | 6435 | 6444 | 6454 | 6464 | 6474 | 6484 | 6493 | 6503 | 6513 | 6522 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 45 | 6532 | 6542 | 6561 | 6561 | 6571 | 6580 | 6590 | 6599 | 6609 | 6618 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 46 | 6628 | 6637 | 6646 | 6656 | 6665 | 6675 | 6684 | 6693 | 6702 | 6712 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 7 | 8 |
| 47 | 6721 | 6730 | 6739 | 6749 | 6758 | 6767 | 6776 | 6785 | 6794 | 6803 | 1 | 2 | 3 | 4 | 5 | 5 | 6 | 7 | 8 |
| 48 | 6812 | 6821 | 6830 | 6839 | 6848 | 6857 | 6866 | 6875 | 6884 | 6893 | 1 | 2 | 3 | 4 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 49 | 6902 | 6911 | 6920 | 6928 | 6937 | 6946 | 6955 | 6964 | 6972 | 6981 | 1 | 2 | 3 | 4 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 50 | 6990 | 6998 | 7007 | 7016 | 7024 | 7033 | 7042 | 7050 | 7059 | 7067 | 1 | 2 | 3 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 51 | 7076 | 7084 | 7093 | 7101 | 7110 | 7118 | 7126 | 7135 | 7143 | 7152 | 1 | 2 | 3 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 52 | 7160 | 7168 | 7177 | 7185 | 7193 | 7202 | 7210 | 7218 | 7226 | 7235 | 1 | 2 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 7 |
| 53 | 7243 | 7251 | 7259 | 7267 | 7275 | 7284 | 7292 | 7300 | 7308 | 7316 | 1 | 2 | 2 | 3 | 4 | 5 | 6 | 6 | 7 |
| 54 | 7324 | 7332 | 7340 | 7348 | 7356 | 7364 | 7372 | 7380 | 7388 | 7396 | 1 | 2 | 2 | 3 | 4 | 5 | 6 | 6 | 7 |
| | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LOGARITHIMS


| | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | Mean Difference 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 55 | 7404 | 7412 | 7419 | 7427 | 7435 | 7443 | 7451 | 7459 | 7466 | 7474 | 1 | 2 | 2 | 3 | 4 | 5 | 5 | 6 | 7 |
| 56 | 7482 | 7490 | 7497 | 7505 | 7513 | 7520 | 7528 | 7536 | 7543 | 7551 | 1 | 2 | 2 | 3 | 4 | 5 | 5 | 6 | 7 |
| 57 | 7559 | 7566 | 7574 | 7582 | 7589 | 7597 | 7604 | 7612 | 7619 | 7627 | 1 | 2 | 2 | [illegible] | 4 | 5 | 5 | 6 | 7 |
| 58 | 7634 | 7642 | 7649 | 7657 | 7664 | 7672 | 7679 | 7686 | 7694 | 7701 | 1 | 1 | 2 | 3 | 4 | 4 | 5 | 6 | 7 |
| 59 | 7709 | 7716 | 7723 | 7731 | 7738 | 7745 | 7752 | 7760 | 7767 | 7774 | 1 | 1 | 2 | 3 | 4 | 4 | 5 | 6 | 7 |
| 60 | 7782 | 7789 | 7796 | 7803 | 7810 | 7818 | 7825 | 7832 | 7839 | 7846 | 1 | 1 | 2 | 3 | 4 | 4 | 5 | 6 | 6 |
| 61 | 7853 | 7860 | 7868 | 7875 | 7882 | 7889 | 7896 | 7903 | 7910 | 7917 | 1 | 1 | 2 | 3 | 4 | 4 | 5 | 6 | 6 |
| 62 | 7924 | 7931 | 7938 | 7945 | 7952 | 7959 | 7966 | 7973 | 7980 | 7987 | 1 | 1 | 2 | 3 | 3 | 4 | 5 | 6 | 6 |
| 63 | 7993 | 8000 | 8007 | 8014 | 8021 | 8028 | 8035 | 8041 | 8048 | 8055 | 1 | 1 | 2 | 3 | 3 | 4 | 5 | 5 | 6 |
| 64 | 8062 | 8069 | 8075 | 8082 | 8089 | 8096 | 8102 | 8109 | 8116 | 8122 | 1 | 1 | 2 | 3 | 3 | 4 | 5 | 5 | 6 |
| 65 | 8129 | 8136 | 8142 | 8149 | 8156 | 8162 | 8169 | 8176 | 8182 | 8189 | 1 | 1 | 2 | 3 | 3 | 4 | 5 | 5 | 6 |
| 66 | 8195 | 8202 | 8209 | 8215 | 8222 | 8228 | 8235 | 8241 | 8248 | 8254 | 1 | 1 | 2 | 3 | 3 | 4 | 5 | 5 | 6 |
| 67 | 8261 | 8267 | 8274 | 8280 | 8287 | 8293 | 8299 | 8306 | 8312 | 8319 | 1 | 1 | 2 | 3 | 3 | 4 | 5 | 5 | 6 |
| 68 | 8325 | 8331 | 8338 | 8344 | 8351 | 8357 | 8363 | 8370 | 8376 | 8382 | 1 | 1 | 2 | 3 | 3 | 4 | 4 | 5 | 6 |
| 69 | 8388 | 8395 | 8401 | 8407 | 8414 | 8420 | 8426 | 8432 | 8439 | 8445 | 1 | 1 | 2 | 2 | 3 | 4 | 4 | 5 | 6 |
| 70 | 8451 | 8457 | 8463 | 8470 | 8476 | 8482 | 8488 | 8494 | 8500 | 8506 | 1 | 1 | 2 | 2 | 3 | 4 | 4 | 5 | 6 |
| 71 | 8513 | 8519 | 8525 | 8531 | 8537 | 8543 | 8549 | 8555 | 8561 | 8567 | 1 | 1 | 2 | 2 | 3 | 4 | 4 | 5 | 5 |
| 72 | 8573 | 8579 | 8585 | 8591 | 8597 | 8603 | 8609 | 8615 | 8621 | 8627 | 1 | 1 | 2 | 2 | 3 | 4 | 4 | 5 | 5 |
| 73 | 8633 | 8639 | 8645 | 8651 | 8657 | 8663 | 8669 | 8675 | 8681 | 8686 | 1 | 1 | 2 | 2 | 3 | 4 | 4 | 5 | 5 |
| 74 | 8692 | 8698 | 8704 | 8710 | 8716 | 8722 | 8727 | 8733 | 8739 | 8745 | 1 | 1 | 2 | 2 | 3 | 4 | 4 | 5 | 5 |
| 75 | 8751 | 8756 | 8762 | 8768 | 8774 | 8779 | 8785 | 8791 | 8797 | 8802 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 5 | 5 |
| 76 | 8808 | 8814 | 8820 | 8825 | 8831 | 8837 | 8842 | 8848 | 8854 | 8859 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 5 | 5 |
| 77 | 8865 | 8871 | 8876 | 8882 | 8887 | 8893 | 8899 | 8904 | 8910 | 8915 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 | 5 |
| 78 | 8921 | 8927 | 8932 | 8938 | 8943 | 8949 | 8954 | 8960 | 8965 | 8471 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 | 5 |
| 79 | 8976 | 8982 | 8987 | 8993 | 8998 | 9004 | 9009 | 9015 | 9020 | 9025 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 | 5 |
| 80 | 9031 | 9036 | 9042 | 9047 | 9053 | 9058 | 9063 | 9069 | 9074 | 9079 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 | 5 |
| 81 | 9085 | 9090 | 9096 | 9101 | 9106 | 9112 | 9117 | 9122 | 9128 | 9133 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 | 5 |
| 82 | 9138 | 9143 | 9149 | 9154 | 9159 | 9165 | 9170 | 9175 | 9180 | 9186 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 | 5 |
| 83 | 9191 | 9196 | 9201 | 9206 | 9212 | 9217 | 9222 | 9227 | 9232 | 9238 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 | 5 |
| 84 | 9243 | 9248 | 9253 | 9258 | 9263 | 9269 | 9274 | 9279 | 9284 | 9289 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 | 5 |
| 85 | 9294 | 9299 | 9304 | 9309 | 9315 | 9320 | 9325 | 9330 | 9335 | 9340 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 | 5 |
| 86 | 9345 | 9350 | 9355 | 9360 | 9365 | 9370 | 9375 | 9380 | 9385 | 9390 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 | 5 |
| 87 | 9395 | 9400 | 9405 | 9410 | 9415 | 9420 | 9425 | 9430 | 9435 | 9440 | 0 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 |
| 88 | 9445 | 9450 | 9455 | 9460 | 9465 | 9469 | 9474 | 9479 | 9484 | 9489 | 0 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 |
| 89 | 9494 | 9499 | 9504 | 9509 | 9513 | 9518 | 9523 | 9528 | 9533 | 9538 | 0 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 |
| 90 | 9542 | 9547 | 9552 | 9557 | 9562 | 9566 | 9571 | 9576 | 9581 | 9586 | 0 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 |
| 91 | 9590 | 9595 | 9600 | 9605 | 9609 | 9614 | 9619 | 9624 | 9628 | 9633 | 0 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 |
| 92 | 9638 | 9643 | 9647 | 9652 | 9657 | 9661 | 9666 | 9671 | 9675 | 9680 | 0 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 |
| 93 | 9685 | 9689 | 9694 | 9699 | 9703 | 9708 | 9713 | 9717 | 9722 | 9727 | 0 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 |
| 94 | 9731 | 9736 | 9741 | 9745 | 9750 | 9754 | 9759 | 9763 | 9768 | 9773 | 0 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 |
| 95 | 9777 | 9782 | 9786 | 9791 | 9795 | 9800 | 9805 | 9809 | 9814 | 9818 | 0 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 |
| 96 | 9823 | 9827 | 9832 | 9836 | 9841 | 9845 | 9850 | 9854 | 9859 | 9863 | 0 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 |
| 97 | 9868 | 9872 | 9877 | 9881 | 9886 | 9890 | 9894 | 9899 | 9903 | 9908 | 0 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 |
| 98 | 9912 | 9917 | 9921 | 9926 | 9930 | 9934 | 9939 | 9943 | 9948 | 9952 | 0 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 4 | 4 |
| 99 | 9956 | 9961 | 9965 | 9969 | 9974 | 9978 | 9983 | 9987 | 9991 | 9996 | 0 | 1 | 1 | 2 | 2 | 3 | 3 | 3 | 4 |
| | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |

(Mean Difference: මධ්‍යන්‍ය අන්තරය / இடை வித்தியாசங்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

அமரர் சின்னத்தம்பி + சின்னம்மா

அமரர் மருதப்பு + பாக்கியம்

சிவசுப்பிரமணியம்
நித்தியகல்யாணி
குணபாலன்
றஞ்சினி
லலிதா
யமுனா

குலேந்திரன்

குலேந்திரன் + யமுனா

லபேந்திரன்
லக்ஸ்மன்
ஜனன்
தாரணி
நற்தனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து இறைபாதம் எய்திய எங்கள் குடும்பத்தின் குலவிளக்குகள் திரு.வயிரமுத்து சின்னத்தம்பி திருமதி யமுனா குலேந்திரன் இருவரும் மறைந்த செய்தியை அறிந்து வந்து உதவியவர்களுக்கும் யாழ் போதனா வைத்தியசாலையில் இருந்தபோது உதவிசெய்த வைத்திய நிபுணர்களுக்கும் உத்தியோகத்தர்களுக்கும் உறவினர்களுக்கும் இறுதிக் கிரிகையில் கலந்து கொண்ட அனைவருக்கும் மலர் வலயம் சாத்தி அஞ்சலி செய்தவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலியை வெளியிட்டோருக்கும் தொலைபேசிமூலம் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் பின்னர் நடைபெற்ற அந்தியேட்டி வைபவத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் மற்றும் அச்சகத்தினருக்கும் பொது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

இங்ஙனம்
மனைவி, மகன், கணவன்
பிள்ளைகள், தாய்
சகோதரர்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
உறவுகள்.

மயூரி கிரபிக்ஸ், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org